செ.வெ. எண் : 246 04.05.2007

## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் விவசாயத்திற்கு அடுத்தப்படியாக முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக விளங்குகிறது. கைத்தறி நெசவாளர்களின் வாழ்வு மேம்பட மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில் 4.29 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. அவற்றில் 2.17 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் 6.63 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. அவற்றில் 2.64 இலட்சம் நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பில் உள்ளனர். தமிழ்நாட்டில் 1117 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 70 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாகும். அதிலும் குறிப்பாக காஞ்சிபுரத்தில் 23 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி கைத்தறித் துணி விற்பனை ரூ.1500 கோடியாகும். இதில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.700 கோடி மதிப்பிலான கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்படுகின்றன. பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஆண்டொன்றுக்கு சராசரியாக சுமார் ரூ.108 கோடி மதிப்புள்ள பட்டு சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு சுமார் ரூ.150 கோடி மதிப்புள்ள பட்டு சேலைகள் விற்பனை செய்யப்படுகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் சேலைகளை தலைமை விற்பனை நிலையத்திலும், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமும், லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள், சங்கத்தின் சொந்த காட்சியறைகள் மற்றும் அண்டை மாநிலங்களான ஆந்திரம் மற்றும் கர்நாடகாவில் உள்ள கிளை விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது பட்டு சேலைகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் விலையேற்றத்தின் காரணமாகவும் தற்கால நாகரிகத்திற்கேற்ப மாறி வரும் மக்களின் ரசனையாலும் விற்பனை போதுமானதாக இல்லாத நிலை ஏற்பட்டு சுமார் ரூ.109.27 கோடி மதிப்புள்ள பட்டு சேலைகள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பட்டு நெசவுத் தொழிலில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை ஆராய்ந்து பட்டு நெசவுத் தொழிலை மேம்படுத்தவும், அதனை நம்பி வாழும் நெசவாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழிவகைகள் செய்யவும், அவர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குவதற்கும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேக்கமடைந்துள்ள பட்டு சேலைகளை விற்பனை செய்ய அரசு கீழ்க்கண்டவாறு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்து ஓராண்டுக்கு மேல் விற்பனையாகாமல் தேக்கமடைந்திருந்த பட்டு சேலைகளுக்கு உச்சவரம்பின்றி 10% தள்ளுபடி மான்யம் வழங்கி அரசு ஆணையிட்டது.
- இரண்டாண்டு, மூன்றாண்டு மற்றும் நான்காண்டுகளுக்கு மேலாக விற்பனையாகாமல் தேக்கமடைந்திருந்த பட்டு சேலைகளை சங்க சிறப்பு கமிஷனாக 35%, 45%, மற்றும் 55% சதவிகிதத்துடன் 10% அரசு தள்ளுபடி மான்யம் உச்சவரம்பின்றி அனுமதித்து விற்பனை செய்யவும் 01.10.2006 முதல் 21.04.2007 முடியவுள்ள காலத்திற்கு ஆணையிடப்பட்டது.
- பட்டு சேலைகளின் தேக்கத்தை மேலும் குறைக்க செப்டம்பர் 2006 முதல் மார்ச் 2007 முடிய அண்டை மாநிலங்கள் மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு முக்கிய நகரங்களில் கண்காட்சி விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்படி கண்காட்சிகள் மூலம் சுமார் ரூ.154.22 இலட்சம் மதிப்புள்ள பட்டு சேலைகள் விற்பனை செய்ய வாய்ப்பேற்பட்டது.

தற்போதுள்ள பட்டு சேலைகளின் தேக்கத்தை மேலும் குறைக்க மதுரை மாநகரில் நடைபெறும் பிரசித்தி பெற்ற சித்திரைத் திருவிழாவினையொட்டி 30.04.2007 முதல் 03.05.2007 முடிய ராஜா முத்தையா மன்றத்தில் சிறப்பு கைத்தறி கண்காட்சி நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் 04.05.2007 வெள்ளிக்கிழமை சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள ''சங்கரா உறாலில்'' சிறப்பு கண்காட்சி விற்பனை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் ரூ.2000/– முதல் ரூ.25000/– மதிப்பிலான பட்டு சேலைகள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்படும்

- ஓராண்டிற்கு மேற்பட்ட பட்டு சேலைகளுக்கு 10% சிறப்புக்கமிஷனும் 10% தள்ளுபடியும்
- இரண்டாண்டிற்கு மேற்பட்ட பட்டு சேலைகளுக்கு 35% சிறப்புக்கமிஷனும் 10% தள்ளுபடியும்
- மூன்றாண்டிற்கு மேற்பட்ட பட்டு சேலைகளுக்கு 45% சிறப்புக்கமிஷனும் 10% தள்ளுபடியும்
- நான்காண்டிற்கு மேற்பட்ட பட்டு சேலைகளுக்கு 55% சிறப்புக்கமிஷனும் 10% தள்ளுபடியும்

வழங்கப்படுகிறது. பொதுமக்களும் வாடிக்கையாளர்களும் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மதுரை மாநகரம் மற்றும் சென்னை மாநகரம் ஆகிய இடங்களில் தற்போது நடத்தப்பட்டு வரும் கண்காட்சி விற்பனை மூலம் சுமார் ரூ.25 இலட்சம் முதல் ரூ.30 இலட்சம் மதிப்புள்ள காஞ்சிபுரம் பட்டு சேலைகள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கண்காட்சியில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை அரசு செயலர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப. அவர்கள் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் திரு ம.ரா. மோகன், இ.ஆ.ப. அவர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-600009.